அரசு மேற்கொண்ட முடிவு, தமிழ்நாடு பாட நூல் நிறுவனமே அந்தப் பொறுப்பை ஏற்று, நோட்டுப் புத்தகங்களை தயாரித்து வெளியிட வேண்டுமென்ற முடிவு எவ்வளவு சிறந்தது என்று இப்போது தெரிந்து கொள்ளலாம்.

ஆகவே இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றிருக்கின்ற நிலைமைகள் அரசின் கவனத்திற்கு வந்த காரணத்தினாலேதான் அந்தப் பணியினை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் கீழ் பொறுப்பேற்றுள்ள சிறு தொழில் அதிபர்களிடத்திலே தந்து அதை முறைப்படுத்தி அந்த நோட்டுப் புத்தகங்களை தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனமே வாங்கி பின்னர் விநியோகிக்கின்ற முறை இப்போது இருந்து வருகின்றது. அதிலேயும் சில தவறுகள் வருவது பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட தவறுகளைப் போக்கு வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப் பட்ட நிலைமைகள் குறித்து நாங்கள் அதிகாரிகள் மூலமாக பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தவறுகள் இப்போது அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இதே நேரத்தில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்பு பல மடங்கு தவறுகள் நடந் திருக்க வேண்டும் என்பதை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இது குறித்து சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

4. தகவல் கோரல்.

அ. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்வது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விதி 54-ன் கீழ் பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களை இந்த அவையிலே தந்திருக்கிறோம். அதற்கு அனுமதி அளிக்கப் பட்டு 15 நாட்களுக்கு மேலாகிறது. ஆனால், இதுவரையில் அவைகளுக்கான எந்தவிதமான விடையும் எங்களுக்குத் தரப்பட வில்லை. தாங்கள், கவனஈர்ப்புத் தீர்மானங்கள் உடனுக்கு டன் எடுத்துக் கொள்ளப்பட்டுவிடையளிக்கப்படும் என்று தெரி வித்

திருக்கிறீர்கள். நான் கொடுத்திருப்பது மிகவும் முக்கியமான கவன ஈர்ப்புத் தீர்மானம். மேட்டூர் அணையைத் திறந்து கிட்டத்தட்ட ஒரு மாத காலம் ஆகப் போகிறது. விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்குக்கூட இதுவரை கடன் கொடுக்கப்படாத நிலை இருக்கின்றது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக கடன் வழங்குவது பற்றி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானம் இன்னும் அவைக்கு ஏன் வரவில்லை என்று மட்டும்தான் கேட்கலாம். அதன் பொருளுக்குள்ளே போய் பேசக் கூடாது. தினந்தோறும் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர்களுடைய கேள்விக்குரிய பதில்கள் எல்லாம் விரைவிலே கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, அனுமதி அளிக்கப்பட்டு 15 நாட்கள் ஆகிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42 நாட்கள் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை முன்பு இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்புதான் 15 நாட்களுக்குள்ளாக விடை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளோம். ஆகவே கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாம் இலாக்காக்களுக்குப் போயிருக்கின்றன. விரைவில் பதில் வந்ததும் அவையில் எடுத்துக் கொள்ளப்படும். மேலும் நீங்கள் எல்லாம் ஒரு காலத்திலே ஆளும் கட்சியினராக இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு எல்லா விவரங்களும் தெரிந்திருக்கும்.

(ஆ) மின்சாரத்துறை அமைச்சரின் அறிவிப்பு செயல்முறைக்கு வருதல்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் மின்சார வெட்டு குறைக்கப்பட்டிருப்பதாகவும், பகல் நேரங்களில் மின்சாரம் கொடுக்கப்படுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். பகல் நேரங்களிலே மின்சாரம் கொடுப்பதில்லை என்று தந்தியும் தபால்களும் வந்தவண்ணம் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் உத்தரவு எல்லா இடங்களுக்கும் சென்று விட்டதா ? பகல் நேரத்தில் 6 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.